DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender/ Miscellaneous : **CC.No. 358/2025**

Preliminary Register :

Sessions :

Deposition of witness for : P.w.2

Name : தர்மராஜ் ( முதல் நிலை காவலர் )

Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22th day of May 2026

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை :–**

நான் வச்சகாரப்பட்டி காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.04.2025 ம் தேதியன்று மல்லாங்கணிர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மகேஷ்வரன் அவர்களுடன் நானும் மற்றும் த.கா. கருப்பசாமி ஆகியோர் பார்டி சகிதம் மது விலக்கு சம்பந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்தபோது 19.40 மணிக்கு முடியனூர் கோவில்பட்டி ரோடு அய்யனார் கோவில் அருகே வந்த போது அங்கு சந்தேகப்படும் படியாக ஒரு சாக்கு பையுடன் நின்று கொண்டிருந்த நபர்

வைத்திருந்த சாக்குபையை சோதனை செய்தததில் சுமார் 180 மிலி கொண்ட Vorion No.1 Brandy மொத்தம் 30 மதுபாட்டில்கள் இருந்தன.

2. மேற்படி பாட்டில்கள் பற்றி விசாரித்தபோது எவ்வித அரசு அனுமதியும் உரிமமும் இல்லை என்றும் கூறினார். மேற்படி பாட்டில்களை சுயலாப நோக்கத்துடன் விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி முனியாண்டி, த/பெ.சமையன், காலனி தெரு, முடியனூர் கிராமம் என்பவரை அந்த இடத்திலேயே கைது செய்தும் மதுபாட்டில்களை அத்தாட்சியில் கைப்பற்றி அதில் கையெழுத்திட தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும் என்னுடன் வந்த த.கா.கருப்பசாமி ஆகிய எங்கள் இருவர் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அதில் நானும், த.கா. கருப்பசாமியும் கையொப்பம் செய்தோம்.

3. பின்னர் சம்பவ இடத்திலிருந்து எதிரி முனியாண்டி, த/பெ.சமையன், மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 81/2025 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேல்கண்ட நடவடிக்கைகளுக்கு சார்பு ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எ.த.கு.வி–**

சம்பவதன்று ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும் எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. எங்கள் உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலைய கையிருப்பில் உள்ள மதுபாட்டில்களை நான் எதிரியிடம் இருந்து

கைப்பற்றப்பட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொது மக்கள் அல்லது தனிநபர் சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படாத காரணத்தினால் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை.**

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, KARIAPATTI

Calender/ Miscellaneous : **CC.No. 358/2025**

Preliminary Register :

Sessions :

Deposition of witness for : P.w.1

Name : கருப்பசாமி (தலைமை காவலர்)

Father/Husband Name :
Village :
Taluk :
Caste :
Calling :
Religion :
Age :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 22th day of May 2026

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை :–**

1. நான் ஆமத்தூர் காவல் நிலையத்தில் தலைமை காவலராக பணியாற்றி வருகிறேன். கடந்த 20.04.2025 ம் தேதியன்று மல்லாங்கணிர் காவல் நிலைய சார்பு ஆய்வாளர் மகேஷ்வரன் அவர்களுடன் நானும் மற்றும் முதல் நிலை காவலர் தர்மராஜ் ஆகியோர் பார்டி சகிதம் மது விலக்கு சம்பந்தமாக ரோந்து செய்து கண்காணித்து வந்தபோது 19.40 மணிக்கு முடியனூர் கோவில்பட்டி ரோடு அய்யனார் கோவில் அருகே வந்த போது அங்கு சந்தேகப்படும் படியாக ஒரு சாக்கு பையுடன் நின்று

கொண்டிருந்த நபர் வைத்திருந்த சாக்குபையை சோதனை செய்தததில் சுமார் 180 மிலி கொண்ட Vorion No.1 Brandy மொத்தம் 30 மதுபாட்டில்கள் இருந்தன.

2. மேற்படி பாட்டில்கள் பற்றி விசாரித்தபோது எவ்வித அரசு அனுமதியும் உரிமமும் இல்லை என்றும் கூறினார். மேற்படி பாட்டில்களை சுயலாப நோக்கத்துடன் விற்பனை செய்வதற்காக வைத்திருந்த குற்றத்திற்காக எதிரி முனியாண்டி, த/பெ.சமையன், காலனி தெரு, முடியனூர் கிராமம் என்பவரை அந்த இடத்திலேயே கைது செய்தும் மதுபாட்டில்களை அத்தாட்சியில் கைப்பற்றி அதில் கையெழுத்திட தனிநபர் சாட்சிகள் யாரும் முன்வராததால் நானும் என்னுடன் வந்த மு.நி.கா.தர்மராஜ் ஆகிய எங்கள் இருவர் முன்னிலையில் அத்தாட்சி தயார் செய்து கைப்பற்றினார். அதில் நானும், மு.நி.கா. தர்மராஜீம் கையொப்பம் செய்தோம். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சியில் உள்ள 1வது கையொப்பம் என்னுடையதுதான். **(அந்த அத்தாட்சி அசா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

3. பின்னர் சம்பவ இடத்திலிருந்து எதிரி முனியாண்டி, த/பெ.சமையன், மற்றும் வழக்கு சொத்துக்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண். 81/2025 பிரிவு 4(1)(C) TNP Act ன் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேல்கண்ட நடவடிக்கைகளுக்கு சார்பு ஆய்வாளருக்கு நான் உதவியாக இருந்தேன். இது சம்பந்தமாக சார்பு ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எ.த.கு.வி–**

சம்பவதன்று ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றாலும் எதிரியிடம் இருந்து எந்த பொருளும் கைப்பற்றப்படவில்லை என்றாலும்

எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல. எங்கள் உயர் அதிகாரிகள் கேட்டுக் கொண்டதற்கிணங்க காவல் நிலைய கையிருப்பில் உள்ள மதுபாட்டில்களை நான் எதிரியிடம் இருந்து கைப்பற்றப்பட்டதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. பொது மக்கள் அல்லது தனிநபர் சாட்சிகள் யாரும் இவ்வழக்கில் சாட்சியாக சேர்க்கப்படாத காரணத்தினால் வழக்கு சம்பவம் நடக்கவில்லை என்றாலும் காவல் நிலையத்தில் தயார் செய்யப்பட்ட அத்தாட்சியில் நான் கையொப்பம் செய்துவிட்டு தற்போது அதனை மறைத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறு விசாரணை –**

**இல்லை.**